# 4.4 பார்க்கச் செல்லல்

## இலக்கு

*மாணவர்கள் மாறுபாடான எதிர்பார்ப்புகளுடன் புதியவர்களுக்கிடையில் ஏற்படும் பழகுவதுபோல வாய்மொழியற்ற ஒரு போலி நடிப்பு ஒன்றில் ஈடுபடுவர். தொடர்ந்து பகுப்பாய்வின் ஊடாக அவர்களது உருக்காட்டுத் திறன் தொடரப்பட வேண்டும், இதன்மூலம் பல்பண்பாட்டுத் தொடர்பாடலுடன் ஆழமான பட்டறிவுகளை அவர்கள் பெற்றுக்கொள்வர்.*

வகுப்பு 4 - 9

30 - 45 மணித்துளிகள்



**கருவிகள்:**
பணித்தாள் பிரதிகள்

**குறிப்புகள்:**

- வாய்மொழியற்ற தொடர்பாடல் பற்றிய நுட்பங்களை அறிந்து ஆழப்படுத்த உரையாடல்களின்போது தங்களையோ அல்லது மற்றவர்களையோ அடுத்துவரும் 2 – 3 கிழமைகளில் கூர்ந்து அவதானித்து எடுத்துக்காட்டுகளை வகுப்புக்குக் கொண்டுவரவேண்டும் என்று பணிப்பதனூடாகச் செய்யமுடியும்.
- வளம்: பல்பண்பாட்டு பயிற்சி (மேலே 4.1 ஐப் பார்க்கவும்.)

---

**நடைமுறை:**

- மாணவர்கள் இணைகளாகப் பிரிக்கப்படுவர். ஒருவர் விருந்து கொடுப்பவராக, மற்றவர் விருந்தினராக கதாபாத்திரம் எடுப்பர். எல்லோரும் தமது குழுக்களுக்காக கதாபாத்திர அறிவுறுத்தல்களைப் பெற்றுக் கொள்வர் (அடுத்த பக்கத்தைப் பார்க்கவும்). ஏற்பாடுசெய்யும் வேளைகளில் விருந்து வழங்குவோர் வகுப்பறையில் இருப்பர். விருந்தினர் அடுத்த அறைக்குச் செல்வர். அல்லது மண்டப வழியில் இருப்பர். அத்தகைய ஏற்பாட்டு வேளைகளில், மாணவர்கள் தங்களுடைய ஒப்படைத் தாளில் பட்டியலிடப்பட்ட குறிப்புகளை, வாயாலே பேசாமல், எப்படி வாய்மொழியற்ற முறையில் விளக்குவார் என்பதை உருக்காட்டலால் கருத்திற்கொள்ளவேண்டும்.
- 10 மணித்துளிகளுக்குப் பின் அந்த சந்திப்பு தொடங்கும். சொற்கள் பயன்படுத்தப்படமாட்டா. 10 மணித்துளிகள் நாடகம் நீடிக்கும். தங்களது பட்டறிவுகளைப் பற்றிச் சுருக்கமாக அறிக்கையிடும்படி சில இணைகளிடம் ஆசிரியர் கேட்பார்.
- வகுப்பு முழுமையாக உருக்காட்டுதலுடன் கலந்துரையாடல். தூண்டிகள்:
  - எது நன்றாக வேலை செய்தது? ஏன்? எந்த வகையான உணர்ச்சிகளை அது தூண்டியது?
  - எது முழுமையாக வேலை செய்யவில்லை? ஏன்? எந்த வகையான உணர்ச்சிகள் தூண்டப்பட்டன?
  - விருந்தினர்கள் விருந்து வழங்கியவரின் நடத்தையை விளங்கிக் கொண்டனரா?
  - சில எதிர்பார்ப்புக்கள் நிறைவேற்றப்படாத போது அவை எதனைத் தூண்டின?
  - எதிர்பார்ப்புகள் எல்லாம் எதைப்பற்றியன?
  - பொதுமைப்பாடு: எங்கே இதே மாதிரியான சூழல்கள் உண்மையில் இடம்பெற்றன? இது தொடர்பாக நீர் ஏற்கனவே பட்டறிவு பெற்றுக்கொண்டீரா? உமது மனக்குறிப்பு என்ன?
  - குறிப்பாக வேறுபட்ட பண்பாடுகளுக்கிடையில் எழும் வேறுபட்ட எதிர்பார்ப்புகளை சந்திக்கும் எடுத்துக்காட்டுகள் உமக்குத் தெரியுமா?

4

ப.தா.

# கதாபாத்திரத்திற்கான நடைமுறைகள்

மாணவர்களுக்கான பணித்தாள்

## விருந்து வழங்குவோருக்கான கதாபாத்திர நடைமுறை

**விருந்து வழங்குவோரின் நடத்தை:**

- கண்களை உருட்டுவதன் மூலம் ஆம் எனக் குறி காட்டுவர்.
- நாக்கை வெளிக்காட்டுவதனால் இல்லை எனக் குறி காட்டுவர்.
- ஏதாவது காட்ட விரும்பின் கைகளைப் பயன்படுத்தாது, அதனை உற்றுநோக்குவர்.

**விருந்தாளிகள் பற்றி விருந்து வழங்குவோரின் எதிர்பார்ப்புகள்: அவர்கள் கட்டாயம் …**

- … அவர்களுடைய காலணிகளை அகற்ற வேண்டும.
- … முதலில் அவர்கள் கைகளைக் கழுவ வேண்டும்.
- … விருந்து வழங்குவோருக்கு ஒரு சில்லறைக் காசினை அன்பளிப்பாக வழங்க வேண்டும்.
- … விருந்து வழங்குவோருக்கு கொடுக்க ஒரு கதிரையை எடுக்கவேண்டும்.
- … கதிரைக்குப் பக்கத்தில் சப்பாணி கட்டிக்கொண்டு இருக்க வேண்டும்.



## விருந்தாளிகளுக்கான கதாபாத்திர நடைமுறை

**விருந்து வழங்குவோர் பற்றி விருந்தாளிகளின் எதிர்பார்ப்புகள் அவர்கள் கட்டாயம் …**

- … விருந்தினரை தலை தாழ்த்தி வணங்கவேண்டும்.
- … தம்முடைய பற்களைக் காட்ட வேண்டும்.
- … தம்முடைய தொலைபேசி இலக்கங்களை வழங்கவேண்டும்.
- … விருந்தினருக்கு தம் கலைப்பொருள் ஒன்றை வழங்கவேண்டும்.
- … அவர்கள் பெயரை ஒரு தாளில் எழுத வேண்டும்.
- … விருந்தாளிகளுக்கு ஒரு கதிரை வழங்க வேண்டும்.

